DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SC.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.22

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பழனிச்சாமி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 1st day of April, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது மதுரை மாநகர் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். கடந்த 08.11.2021ம் தேதி காலை 08.30 மணிக்கு நான் எம்.புதுப்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, செங்குன்றாபுரத்தை சேர்ந்த முருகன் மகன் நாகராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று அதன்தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.166/2021 U/s 302, 201 of IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவின் அசலையும் சிவகாசி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு துரித தபாலாக அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை உயர்அதிகாரிகளின் பார்வைக்கும், ஒரு நகலை புலன் விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

எங்கள் காவல்நிலையத்திலிருந்து சிவகாசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அதிகபட்சமாக 1மணி நேரத்தில் சென்றுவிடலாம். காலை 08.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் எண்.15 ல் எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்ட்டது என்று நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சிவகாசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் மேற்படி முதல் தகவல் அறிக்கை கடந்த 08.11.2021ம் தேதி மாலை 05.10மணிக்கு தான் பெறப்பட்டது என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கான காரணத்தை குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக புகார் பெறப்படும் வரையில் எங்கள் காவல்நிலையத்திற்கு இந்த வழக்கு சம்மந்தமாக எந்த ஒரு தகவலும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் 1 மணிநேரத்திற்கு முன்னதாகத்தான் மேற்படி முதல் தகவல் அறிக்கை தயார்செய்யப்பட்டு அனுப்பப்பட்டது என்பதால் தான் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னமாதிரி சொன்னநேரத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>